**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**O.S. No. 117/2009**

**in**

**C/W. O.S.No. 167/2021**

**தேதி :** 14.07.2023

**(பி.வா.சா.–5)** – விவேகானந்தன்

சாட்சி அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில்)**

சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். இந்த உயில் யார் எழுதி வைத்தார்கள் என்றால் மனோகரன் என்பவர் எழுதிய உயிலுக்கு நான் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறேன். அந்த உயில் எந்த தேதி எழுதியது என்றால் 26.1.2006 அன்று எழுதப்பட்டது. நான் சாட்சி கையொப்பமிட்ட உயில் என் வசம் தான் அவர் இறக்கும் வரை இருந்தது. மனோகரன் 2006 ஆம் வருடம் இறந்துவிட்டார். உயில் எழுதிய 4, 5 மாதங்கள் கழித்து அவர் இறந்துவிட்டார். உயில் எழுதியது சம்மந்தமாக வேறு யாரிடமாவது சொன்னேனா என்றால் யாரிடமும் தெரிவிக்க வேண்டாமென மனோகரன் கேட்டுக்கொண்டதால் நான் யாரிடமும் தெரிவிக்கவில்லை. அந்த உயில் வெற்றுப் பேப்பரில் எழுதிக்கொடுத்துள்ளாரா அல்லது முத்திரைத் தாளில் எழுதப்பட்டதா என்றால் அது வெள்ளைத் தாளில் அவர் சொல்படி தயார் செய்யப்பட்டது. மனோகரனின் சொல்படி கணிணி தட்டச்சு செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்திலும் அ.வ.எண்.1/2007 வழக்கிலும் நான் இதே உயில் சம்மந்தமாக சாட்சியம் அளித்துள்ளேன். அவ்வழக்கின் முடிவு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அந்த வழக்கில் எனது சாட்சியம் செல்லாது என மேற்படி வழக்கில் மாவட்ட நீதிமன்றம் முடிவு செய்துள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் சாட்சி கையொப்பமிட்ட மனோகரனின் உயில் பதிவு செய்யப்படாதது. என்னுடைய உடன்பிறந்த தம்பி கோமதிநாயகம் என்றால் சரிதான். கோமதிநாயகம் முருகவேல் செட்டியார் எழுதிய உயில் குறித்து சாட்சி சொல்லியுள்ளார். 2–ம் பிரதிவாதி திலகம் எனக்கு உறவினர் அல்ல, அவர் என் நண்பரின் மனைவி. இந்த உயில் மனோகரன் இறந்தபிறகு நானும், 2–ம் பிரதிவாதியும் சேர்ந்து கையொப்பமிட்டு மோசடியாக தயாரித்தது என்றால் சரியல்ல. மேற்படி உயிலை நான் 4, 5 மாதங்கள் வரை என் வசம் வைத்திருந்தேன். மேற்படி உயிலை பதிவு செய்யுமாறு நான் மனோகரனுக்கு அறிவுறுத்தவில்லையா என்றால் உயிலில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்றும், அது அவரின் மனைவி மக்களுக்கு ஏற்படுத்தியது என்றும் மனோகரன் தெரிவித்தார். நானும், 2–ம் பிரதிவாதி திலகமும் பொய்யாக உயிலை ஏற்படுத்தியதாக சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.07.14 18:17:56 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி